**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 73/2018**

**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சிராஜ்தீன் | **Caste** | : | |
| **Father's Name** | : | நாகூர்கனி | **Calling** | : | சென்னை பெருநகர் ஆயுதப்படை **Grade-1** |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |
| | | | **Dated** | : | **07.01.2025** |

**07.01.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 2 திரு. சிராஜ்தீன் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.5 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>1 வது எதிரி இறப்பு. 2, 3 வது எதிரிகள் ஆஜர்</u>**

1. நான் தற்போது சென்னை பெருநகர் ஆயுதப்படை பிரிவில் Grade–1 காவலாக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவத்தின்போது பழனி பட்டாளியனில் நாயக் ஆக பணிபுரிந்து வந்தேன். கடந்த 30.03.2017 ம் தேதி நானும், தலைமை காவலர் தர்மராஜ் என்பவரும் இரவு 10.45 மணிக்கு பித்தளைபட்டி பிரிவு பீட்டில் பணியிலிருந்தோம். பித்தளை பட்டி பைபாஸ் மற்றும் வத்தலகுண்டு பைபாஸில் உள்ள டாஸ்மார்க் –ல் உள்ள ஊழியர்கள் மற்றும் டாஸ்மாக் கடைகளில் வசூல் ஆன பணத்தையும் எடுத்துவந்த ஊழியர்களை பேருந்தில் ஏற்றிவிட்டு பின்னர் பித்தளை பிரிவில் கடைகள் ஏதும் திறந்துள்ளதா என்று நானும், தலைமை காவலர் தர்மராஜ் –ம் கண்காணித்து கொண்டிருந்த வேலையில் 7774 என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனத்தை 3 நபர்கள் எங்களை கடந்து சென்றார்கள். சந்தேகத்தின்பேரில் நான் தர்மராஜ் ஏட்டயாவும் அவர்களை விரட்டி சென்று பார்த்தோம். அவர்களை விசாரித்து கொண்டிருந்தபோதே

அந்த வண்டியை ஓட்டிவந்த நபர் கத்தியால் என்னை வெட்டி வந்தார் நான் விலகி விட்டேன். அதன்பின்னர் தர்மராஜ் ஏட்டயாவை கைகளிலும், கால்களிலும் அந்த நபர் வெட்டிவிட்டார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்களை நான் சம்பவயிடத்திலும், காவல்நிலையத்திலும் பார்த்துள்ளேன். நீதிமன்றத்தில் நீலநிற சட்டை அணிந்த எதிரி தான் வாகனத்தை ஓட்டிவந்தவர், அவர்தான் ஏட்டயாவை தாக்கினார். (நீலநிற சட்டை அணிந்துள்ள எதிரி அந்தோணி(எ)ஈக்குழி 2வது எதிரி ஆவார்). அந்த தகவலை கண்காணிப்பாளருக்கும், கட்டுபாட்டு அறைக்கும் தகவல் கொடுத்தோம். சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜாகணேஷ் என்பவர் சம்பவயிடத்திற்கு வந்துவிட்டார். பின்னர் காயம்பட்ட தர்மராஜை திண்டுக்கல் அரசு மருத்துமனையில் சிகிச்சைக்காக சேர்தோம். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

திண்டுக்கல் தாலுகா காவல்நிலையத்தில் பணிபுரிவதற்கு எழுத்துபூர்வமான எந்த உத்தரவும் எனக்கு அளிக்கபடவில்லை என்றால் சரியல்ல. எழுத்துபூர்வமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த எழுத்துபூர்வமான உத்தரவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னதை தான்போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். திண்டுக்கல் தாலுகா காவல்நிலையத்தில் தலைமை காவலர் தர்மராஜிம் இரவு 9.45 மணிக்கு இருசக்கரவாகனத்தில் புறப்பட்டோம். நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தினுடைய வாகன எண், எந்த வகையான வாகனம் என்பது பற்றி எனக்கு தெரியாது. பித்தளைபட்டியில் உள்ள டாஸ்மாக் ஊழியர்களை பாதுகாப்பாக அனுப்பி வைக்க எங்களுக்கு எந்தவிதமாக உத்தரவும் வழங்கவில்லை என்றால் சரிதான். பித்தளைபட்டியில் உள்ள டாஸ்மாக் ஊழியர்கள் புகார் எதுவும் கொடுத்திருக்கிறார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிகளுடைய அடையாள அணிவகுப்பு என் முன்னிலையில் நடத்தபடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் தனிப்பட்ட முறையில் புகார் எதுவும் வழங்கவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட தர்மராஜை எத்தனை மணிக்கு அரசு மருத்துவமனையில் சேர்தோம் என்றால் 11.45 மணிக்கு நான் தான் சேர்தேன். திண்டுக்கல் தாலுகா காவல்நிலைய சார்பு ஆய்வாளர் முத்துலெட்சுமி அவர்கள் திண்டுக்கல் அரசுமருத்துவமனைக்கு வந்தார்கள். அவர் எங்களிடம் புகார் எதுவும் பெறவில்லை. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் உண்மையான சாட்சி இல்லாததால் காவல் அதிகாரிகள் கேட்டுகொண்டதற்கிணங்க உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியாக சேர்க்கப்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் பற்றி

எனக்கு எதுவும் தெரியாது என்றும், எதிரிகள் எங்களை எதுவும் தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. திண்டுக்கல் தாலுகா காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் எதிரியுடைய பெயரை எனக்கு தெரியபடுத்தியதன் அடிப்படையில் அடையாளம் காண்பிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்திலிருந்து பித்தளைபட்டி டாஸ்மாக் கடைக்கு 10.15 மணிக்கு சென்றோம். டாஸ்மாக் கடையின் நேரம் இரவு 10.00 மணிக்கு முடிந்துவிடும் என்றால் சரிதான்.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.01.07 15:12:09 +0530

Judicial Magistrate No.I
Dindigul.